# JUMPIN

JUMPIN
JUGENDBERATUNG
WINTERTHUR

Stadt Winterthur

**Jumpin இளையோர் ஆலோசனை மையம் - இது ஒரு வின்ரர்தூர் நகரத்திலுள்ள இளையோருக்கான சலுகை.**

13 முதல் 18 வயதுக்குட்பட்ட, பாடசாலையிலிருந்து தொழிற்கல்வி மற்றும் வயது வந்தோர் நிலைக்கு செல்லும் நிலையில் உள்ளவர்களுக்குரிய சேவை.

## இளையோர் எம்மிடம் எதற்காக வருகின்றார்கள்.

- பாடசாலையில் அல்லது ஓய்வு நேரங்களில் சவால்கள் ஏற்படுவதால்.
-தொழிற்கல்வி அல்லது பொருத்தமான அடுத்தகட்ட வழிமுறைகளை கண்டறிய ஒத்தாசைகள் தேவைப்படுவதால்.
- தங்கள் சக வயதினருடனும் பெரியவர்களுடனும் பிணக்குகள் ஏற்படுவதினால்.
- எனெனில் அவர்களுக்கு தற்போதய வாழ்க்கையில் உள்ள நெருக்கடிகள் அல்லது சிக்கல்களுக்கு வழி நடத்தல் தேவைப்படுவதால்.

## நாம் அவர்களுடன் ஒன்றிணைந்து இலக்குகளை அடைய விரும்புகின்றோம்.

- இளையோர் பாடசாலையில் தொடர்ந்தும் இருந்தவாறே பாடசாலை கல்வியை வழமையான முறையில் நிறைவு செய்ய முடியும்.
-இளையோர் ஒரு தொழிற்கல்வியையோ அல்லது பொருத்தமான அடுத்தகட்ட வழிமுறைகளையோ கண்டறிந்து கொள்வார்கள்.
-

## எமது சேவைகள்

-ஒன்றிணைந்து தீர்வுக்கான வழிமுறைகள் படிமுறைகளை ஆராய்தல்.
- அவர்களுக்கு பொருத்தமான தொழிலை கண்டறிவதற்கும், தொழிற்கல்வியை தேடுவதற்கும் ஒத்தாசை வழங்குதல்.
- அவர்களுக்கு பொருத்தமான அடுத்தகட்ட மாற்று வழிமுறைகளை தேடும் விடயத்தில் ஒத்தாசை வழங்குதல்..உ+ம் தொழில்கல்வி கிடைக்காத பட்சத்தில், அதற்காக ஒரு வருட காலம் தங்களை அதற்காக தயார் படுத்துதல்.
- சிக்கல்கள், பிணக்குகள் ஏற்படும் பட்சத்தில் அதற்கான ஆலோசனை வழங்குதல் மற்றும் மத்தியஸ்தம் வகித்தல்.
- கடினமான,சிக்கலான நேரங்களில் சமூகநல சேவையுடனான வழிநடத்தல்.
- பாடசாலை விடயங்களில் ஏற்படும் சவால்களுக்கு ஆதரவு வழங்குதல்.
-3 மாத காலப்பகுதிக்குள், கிழமைக்கு 1 அல்லது 2 முறை ஆலோசனை வழங்குதல்.
- புதன்கிழமைகளில் மதிய உணவு.

## எங்கள் சேவையின் தரம்

-இளையோருடன் நாம் பேணும் நம்பிக்கைத் தன்மை கொண்ட தொடர்பே, ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அடிப்படை.
-இளையோரின் பலம்,திறமை மற்றும் அவர்களின் இலக்குகளின் அடிப்படையில் நாம் பணியாற்றுகின்றோம்.
-குழந்தைகளின் வளர்ச்சிக்கு பெற்றோர் மிக முக்கியமானவர்கள். அதனால் அவர்களுடனும் ஒன்றிணைந்து செயற்படுதலை பேணிப் பாதுகாக்கின்றோம்.
-நாம் இளையோர் விடயத்தில் சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் (பாடசாலை, அரச நிர்வாகம், நிறுவனங்கள் .........) நெருக்கமாகப் பணியாற்றுகின்றோம்.
-நாங்கள் அனைத்து தகவல்களையும் மிகவும் ரகசியமாக பேணிக் கையாள்கின்றோம்.

## எம்மிடம் பதிவு செய்தல்

-இளையோர் அல்லது பெற்றோர் எங்களை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.
-பாடசாலை(நிர்வாகம், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகசேவை பணியாளர்) , அரச நிர்வாகிகள், வேறு சம்மந்தப்பட்டவர்களும் இளையோரை எம்முடன் இணைக்கலாம் அல்லது பரிந்துரைக்கலாம்.
-முதலாவது அறிமுகக் கலந்துரையாடலின் பின், இளையோர் Jumpinனுடன் ஒன்றிணைந்து அதில் இணைவது சம்மந்தமான முடிவுகளை எட்டுவார்கள்.
-எமது சேவை இலவசமானது.

# Wie du uns erreichst:

**052 267 22 99**
**jumpin@win.ch**

Besuche uns an unserem Standort im Zentrum von Winterthur. Gemeinsam suchen wir Lösungen, die zu dir passen.

**Jumpin Jugendberatung**
**Untere Vogelsangstrasse 11**
**8400 Winterthur**